www.tamilarangam.net

# அஞ்சலி




**Dr.Rajani Thiranagama**
M.B.B.S. (Colombo), Ph.D. (Liverpool),
Senior Lecturer in Anatomy, University of Jaffna.

23 February, 1954 - 21 September, 1989

In keeping with the wish expressed by the late Dr.Rajani Thiranagama, this book is dedicated to the young men and women and the ordinary voiceless people, whose lives were destroyed to no purpose in the course of the unfinished saga of the people of Sri Lanka.

FROM: THE BROKEN PALMYRAH



டானியல் பீலிக்ஸ்

(யாழ். பல்கலைக்கழகம் - பாதுகாப்புச்சேவை,

12 நவம்பர் 89



தேவதாஸ்


(யாழ். பல்கலைக்கழகம் - பாதுகாப்புச்சேவை)
12 நவம்பர் 89

**கண் கண்ட சாட்சிகள்**

இந்த இரு இரத்த சாட்சிகளும் 12.11.89 இல்
மிருகத்தின் இரத்தவெறிக்குப் பலியானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இரவுக்கு இரவு மேஜைக் கடியில் பதுங்கிக் கிடக்கிறாய்
உனது குழந்தைகளுடன் அசைவற்று.
மெழுகுவர்த்திகூட கொளுத்த முடியாது
நிழல் அல்லது ஒரு சத்தம்கூட வீட்டோர் அனைவரையும் கொன்றுவிடும்.

என்ன இருக்கிறது?
நம்மிடம் மின்சாரமில்லை
நம்மிடம் பணமில்லை
பெரும்பான்மை மக்களுக்கு உணவென்பதே கிடையாது
நாம் வேலை செய்த இடங்களோ தரைமட்டமாகிவிட்டன
நம்மிடம் செயல்படும் மருத்துவமனையும் இல்லை
மருந்தில்லை, எரிபொருளில்லை
15 வருடங்களாக யுத்தம்....

— ரஜினி திராணகமா, யாழ்ப்பாணம்.



*Peace march commemorating Rajani Thiranagama in Jaffna*



www.tamilarangam.net

# இலங்கையின் துயரம்

[ஆபிரிக்க மார்க்சிய அரசியல் விமர்சகர்களில் ஒருவரும் 1964 ஸின்ஸிபார் புரட்சியின் தலைவர்களில் ஒருவருமான அப்துல் ரஹ்மான் மொஹமட்பாபு கடந்த வருடம் நவம்பர் 21இல் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த ராஜனி நினைவுக்கூட்டத்தில் கலந்துகொண்டார். அவரது நேரடி அனுபவம் பற்றிய சில குறிப்புகள் லண்டனிலிருந்து வெளியாகும் 'Inqilab' இதழில் வெளியாகின. அதன் மொழிபெயர்ப்பின் சில பகுதிகளே இவை]

மனித உரிமைகளுக்கான யாழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பின் அழைப்பையேற்று நான் சென்றிருந்த யாழ்ப் பயணம் எனக்குப் பல விடயங்களைத் தெளிவாக்கியது. நானும் மனித உரிமைகளுக்காகப் போராடும் பலரும், (International Alert இன் செயலாளர் மார்ட்டீன் என்னலஸ், பிரிட்டிஷ் தொழிற்கட்சியைச் சேர்ந்த லிஸ் பிலிப்சன் உட்பட) மனித உரிமைப் போராளி- கடந்த வருடம் யாழ். வீதியொன்றில் வைத்து உரிமைகோராத கொலையாளிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட- ராஜனியின் நினைவுக்கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்கப் பட்டிருந்தோம். சக தமிழர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட நூற்றுக் கணக்கான தமிழர்களில் ராஜனியும் ஒருவர். இத்தகைய மரணங்கள் தமிழர்களது போராட்டத்தைப் பலப்படுத்தாமல் பலமிழக்கவே செய்துள்ளன.

நவீன ஆசியாவின் புரட்சிகரப் போராட்டங்களுடன் ஆபிரிக்கா கொண்டிருந்த தொடர்பு மிக நீண்ட வரலாறு கொண்டது. 1950களிலும் 60களிலும் ஆபிரிக்கப் போராளிகள் பலர் போராட்ட உணர்வை ஆசியாவில் நிகழ்ந்த விடுதலைப் போராட்டங்களில் இருந்தே உள்வாங்கினர். சீன, கொரிய, வியட்நாமிய, பர்மிய, மலேசிய, இந்தோனேசிய, இந்திய (நக்சலைட்) போராட்டங்களில் இருந்து அவர்கள் தமக்குத் தேவையான தந்திரோபாயங்களைக் கற்றுக்கொண்டனர். இவற்றில் சில வெற்றியளித்தவை. சில இன்றும் முடியாதவை. எனினும் இப்போராட்டங்கள் யாவும் ஒரு பொதுத் தன்மையைக் கொண்டிருந்தன. அத்தன்மை, இப்போராட்டங்களில் இருந்து மற்றையோரைக் கற்கத் தூண்டியது. இப்போராட்டங்களில் தலைமையேற்ற அமைப்புகள் பெருமளவு மக்கள் ஆதரவைக் கொண்டிருந்தமையே அந்தத் தன்மையாகும். போராளிகளை மக்கள் உயர்வாகக் கருதியதோடு மிக நேசித்தனர். இந்த நேசத்தை இலங்கைக்கு விஜயஞ்செய்த எம்மால் காணமுடியாது இருந்தது. மாறாக மக்கள் போராளிகளைக் கண்டு பயப்படுகிறார்கள். போராளிகளால் மக்கள் வெருட்சியுற்றிருந்ததை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. ஏற்கெனவே கொல்லப்பட்ட தமது உறவினர்கள் நண்பர்கள் போல தாமும் நாளை கண்மூடித்தனமான படுகொலைகளுக்கு உள்ளாகலாம் என அவர்கள் அஞ்சுகின்றனர். முன்னைய ஆசிய போராட்ட அனுபவங்கள் போலன்றி இந்த நிலையின் எதிர்மறைச் செயலால் வெளிநாட்டவர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு விடயமுண்டு. அது என்னவென்றால், விடுதலை இயக்கமொன்று தனது திசைபற்றிய உணர்வை இழக்கும்போது அதனால் ஏற்படக்கூடிய அபாயம் என்பதாகும். இவ்வபாயம் எதிர்மறைப் போக்குகளை விருத்தி செய்வதோடு மக்கள் மீதான மரியாதையை இழப்பதால் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தூண்டிவிடுகிறது. பொதுவாக புரட்சிகரப் போராட்டங்களில் இவ்வாறான திசைமாறும் நிலை ஏற்படும்போது முதற்படியாக போராட்டத்தில் தீவிர ஈடுபாடும் அர்ப்பண உணர்வுமுள்ள போராளிகளை விழுங்கிவிடுகிறது. உடனடியாக சந்தர்ப்பவாதிகளிடமும் வீரசாகச உணர்வு கொண்டோரிடமும் அமைப்புக் கைமாற, படிமுறைகளில் குழப்பங்கள் ஏற்படுவதோடு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் காலாகிறது. ஏனெனில் தவறாக வழிநடாத்தப்படும் எந்தவொரு அமைப்பும் எவ்வகை முரண்பாடுகளை எதிர்நோக்குகையிலும் குழப்பமடைகிறது.

• South Asia Solidarity Group
*வெளியிடும் காலாண்டிதழ். சந்தா - ஐரோப்பிய நாடுகள் 8 பவுண்டுகள், தென்னாசியா 5 பவுண்டுகள், ஏனைய நாடுகள் 10 பவுண்டுகள். தொடர்புகள்*
South Asia Solidarity Group, BM Box 3974, London WC1 N, UK

வேறுபட்ட முரண்பாடுகளை அடையாளங் கண்டு அவற்றைப் பயனுள்ள வகையில் பாவிக்கும் போக்கை இலங்கையிலுள்ள எந்தவொரு முக்கிய அமைப்புகளிடமும் காணமுடியாதுள்ளது. உதாரணமாக 'எதிரி முரண்பாட்டையும்', 'மக்களுக்கு இடையேயான முரண்பாட்டையும்' வேறுபிரிக்க இவ்வமைப்புகள் கொண்டிருந்த இயலாமையே இலங்கையை இன்று 'Killing field' ஆக மாற்றியுள்ளது. அமைப்பின் திறமைவாய்ந்த நண்பர்கள் எதிரியைப்போல் நிர்மூலமாக்கப் படுவதும், எதிரிகள் நண்பர்களாக மாறிக் கூடிக் குலாவுவதும் நிகழ்கிறது. இந்தக் குழப்பநிலை, அமைப்புக்கும், எந்த மக்களின் நலனுக்காக அந்த அமைப்பு போராடுகிறதோ அந்த மக்களின் நலனுக்கும், எந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறதோ அந்த மக்களுக்கும் மிகவும் ஆபத்தான நிலைமையைத் தோற்றுவிக்கும் என்பதை அனுபவம் காட்டி இருக்கிறது. இலங்கையின் துயரமான அனுபவம் இதை உறுதிசெய்கிறது.

ராஜனியின் கொலை சர்வதேச அரங்கில் பலத்த கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது. யாழ் பல்கலைக் கழகத்தால் நடாத்தப்பட்டு வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் ஆயிரக்கணக்கில் வந்த மக்களுடன் நாம் கலந்துகொண்ட இந்த ஊர்வலம் ராஜனியின் மீதான அபிமானத்துக்கு சான்று. எல்லாவீதிகளும் ராஜனியைத் தியாகியாகக் காட்டும் சுவரொட்டிகளைத் தாங்கி நின்றன. அவரது படங்கள் எல்லா இடங்களிலும் இருந்தன. ஊர்வலத்தில் கலந்துகொண்ட பலர் ராஜனியின் படத்தை தாம் கொண்டுசெல்லத் தருமாறு கேட்டனர். நகரமே துக்கம் அனுஷ்டித்தது. ஊர்வலத்தைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் மக்களைப் பயமுறுத்தும் விதத்தில் இந்தியப் படையினரும் ஏனைய ஆயுதக் குழுக்களும் சுற்றிலும் காணப்பட்ட போதிலும் இந்த சந்தர்ப்பத்தில் மக்களை எவராலும் பயமுறுத்தி அடிபணியவைக்க முடியவில்லை. அவர்கள் தமது அனுதாபம் எங்கு என்பதை தெளிவாக்கினர். ராஜனி யாழ்ப்பாணத்தின் காவிய நாயகியே.

INQILAB
SOUTH ASIA SOLIDARITY GROUP'S QUARTERLY MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனது பாதைபற்றிய தெளிவை இழந்த ஓரமைப்பால் ஏனைய பலரைப் போல ராஜனியும் கொல்லப்பட்டிருக்கலாம். இவ்வாறான அமைப்புகள் பதவிக்கு வருகையில், கம்போடியாவில் பொல்போட் (கமரூஜ்) ஆட்சிபோல, மிகப் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்பதை உலக வரலாறுகள் நிரூபித்துள்ளன. தலைவர்கள் பெரும்பாலும் மக்களது பெயராலேயே மக்கள் மீதான மிகமோசமான செயல்களைப் புரியும் நிலை ஏற்படுவதோடு அதை அவர்கள் மிக நேர்மையாகவும் செய்வர். இலங்கையின் வடக்கும் தெற்கும் இந்த நிலையை நோக்கிச் செல்வதாகவே தோற்றந் தருகிறது. பல ராஜனிகள் தோன்றி ஒருமித்த குரலில் 'இனியுங் கொலைகள் வேண்டாம் போதுமென்றால் போதும்' என்று பிரகடனஞ் செய்யாவிடில், இந்தத் தவறான வழிநடத்தற் கோட்பாடுகள் தேசிய அளவில் மிகப்பெரிய அழிவையே ஏற்படுத்தும்.

• யாழ்ப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நால்வரால் எழுதப்பட்ட 'Broken Palmyra' விற்பனைக்குண்டு. வெளிநாடொன்றில், அமைப்பொன்றால் 'தமிழர்கள் வாசிக்கக்கூடாத புத்தகம்' என்று விளம்பரஞ் செய்யப்பட்ட இந்த வரலாற்று நூலைப் பெற விரும்புவோர் post giro மூலம் உடன் 140 குரோணர்களைச் செலுத்தி தபால்மூலம் பெற்றுக் கொள்ளலாம். பிரதிகளுக்கு முந்துங்கள். சொற்ப பிரதிகளே கையிருப்பிலுள்ளன.

J.S.Anthonyppillai
Herslebsgt 43
0578 Oslo5

ஒரு சிங்களக் கவிதை

"அமெரிக்கத் தேசமே
நீ எதைச் சாப்பிடுகிறாய்?"

"எனது கையில் அகப்படும்
எல்லாவற்றையுமே சாப்பிடுகிறேன்"

"ரஸ்ய தேசமே
நீ எதைச் சாப்பிடுகிறாய்?"

"நான் உற்பத்தி செய்யும்
எல்லாவற்றையுமே சாப்பிடுகிறேன்"

"இலங்கைத் தேசமே
நீ எதைச் சாப்பிடுகிறாய்?"

"கண்களை மூடிக் கொண்டு
என்னுடைய எதிர்காலத்தையே
சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்"

தமிழ்ப் பிரச்சினையில் நாட்டின் தென்பகுதியிலும், வெளிநாட்டிலும் வாழும் பலர் பல ஆண்டுகளாக தூய அக்கறை காட்டிவருகின்றனர். இப்பிரச்சினை 1983ல் தோற்றமளித்த இனப் பிரச்சனையிலிருந்து மிகவும் மாற்றமடைந்து வருவது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் இப்போது- ஒரு குறுங் காலத்துக்காவது - வெளிப் பரிமாணங்கள் உட்பரிமாணங்களை மறைத்துக் கொண்டிருக்கிறது. நாம் எல்லோருக்கும் - குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழருக்கு விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் - எம்மை எதிர்கொள்ளும் இப் புதிய யதார்த்தம் பற்றி அனைவரும் விழிப்பாயிருங்கள். எம்மை இப்போது முகங்கொள்வது யாதெனில் அடிப்படை மனிதாபிமானத்துக்கும், நாகரிகமடைந்த விழுமியங்களுக்குமான போர். ராஜினியினதும் அவர் போன்றோரினதும் மரணங்கள் விழலுக்கிறைத்த நீரா என்பதை இதன் முடிவே தீர்மானிக்கும்.

மனித உரிமைகளுக்கான (யாழ்) பல்கலைக் கழக ஆசிரியர் சங்க அறிக்கையிலிருந்து
(ஐப்பசி நடுப்பகுதி 1989)

பனிமலர்

• ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகளிடையே ஒரு புதிய சஞ்சிகை, இருமாத இதழாக வெளிவருகிறது. விலை ஒன்றரைப் பவுண்டுகள் (உள்ளூர் விலைகள் வேறுபடும்) வெளியீடு: தமிழ் மக்கள் புதிய கலாச்சாரக் குழு, BCM POLARIS, LONDON WC 1N 3XX

நன்றி: சுவடுகள்



"புறநிலை யதார்த்த நோக்கினடிப்படையில் உண்மை மீதான வேட்கை, விமர்சனரீதியான நேர்மையான நிலைப்பாட்டை வெளிக்கொணர்தல் போன்றவை எமது சமூகத்திற்கு இன்று தேவையானவை மட்டுமல்ல அது எம்மில் பலரின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். எமது சமூகம் அழிவில் இருந்து தப்பிப்பிழைப்பதற்கு நாம் இந்த நிலைப்பாட்டை எடுப்பது இன்றியமையாததாகிறது."

– ராஜனி திரானகம

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

21.09.89அன்று யாழ் மருத்துவ பீட உடற்கூற்றியற் பிரிவின் தலைவி (head of the anatomy dept.) டொக்டர் ராஜினி அவர்கள் கொல்லப்பட்டது பற்றிச் சுவடுகள் செய்தி வெளியிட்டமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆயிரக் கணக்கான அர்த்தமற்ற கொலைகளைக் கண்டு பழகிப்போனதுடன், தம்மைப் பாதுகாத்துக் கொள்வதன் நிமித்தம் எவ்வித எதிர்த் தாக்கத்தையும் காட்டிக் கொள்ளாத எமது தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை இக்கொலையில் என்ன விசேடத்துவம் இருக்கிறது என்று ஒருவர் வினவலாம். ராஜினிக்கு வாழ்வில் கிடைத்த வாய்ப்புகளையும், அவர் வாழவெனத் தெரிந்தெடுத்த வழிமுறைகளையும் சற்று நோக்கினேமெனில் இக்கேள்விக்கு விடை கிடைக்கலாம்.

<u>யாழ் மருத்துவபீடத்துக்கான பங்களிப்பு</u>

1983 கலவரங்களின் பின்பு உயர்கல்வி பயின்ரோர் நாட்டைவிட்டு வெளியேறியதால் பாதிப்புற்ற துறைகளில் முக்கியமானது வைத்தியத் துறையாகும். ஐந்து மருத்துவ பீடங்களை மொத்தமாகக் கொண்டுள்ள இலங்கை பல்கலைக் கழகங்களில் தேர்ச்சிபெற்ற <u>உடற்கூற்றியலாளர் நால்வரே</u> (இப்போது மூன்று) இருந்தனர். ஒழுங்கான உடற்கூற்றியல் வகுப்பை நடத்த ஒவ்வொரு மருத்துவ பீடத்துக்கும் ஒரு குறித்தளவு உடற் கூற்றியலாளர் தேவை. ஏனென்னில் இப்பாடமே முழு வைத்தியக் கல்விக்கும் ஆதாரமானதாகும்.

யாழ் மருத்துவபீட உடற் கூற்றியல் பிரிவை ராஜினியே ஒருகையால் தலைமை தாங்கி வழிநடாத்தினர். அதன் கல்வித்தரத்தைக் காப்பாற்ற அவர் பல தியாகங்களைச் செய்யவேண்டியிருந்தது. இவரது இழப்பு யாழ்ப்பாணத்தில் உருவாகும் வைத்தியர்களில் ஒரு தரப்பின்னிடைவை ஏற்படுத்துமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

<u>வெளிநாட்டிலிருந்து திரும்பதல்</u>

1987இன் ஆரம்பத்தில் பிரிட்டனில் வைத்தியப் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு நாட்டுக்குச் சேவை செய்யவெனத் திரும்பினர் ராஜினி. அரசபடைகள், தீவிரவாத இயக்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக முன்வைத்த கருத்துகள் தனது உயிருக்கு அச்சுறுத்தலாக அமைவதை அவர் ஏலவே அறிந்திருந்தார். இம்முறை (1989)இல் அவர் மூன்று மாத ஆராய்ச்சிக்கென பிரிட்டன் சென்றிருந்தபோது அவரை அங்கேயே தொடர்ந்து இருக்குமாறு நண்பர்கள் வலியுறுத்தியது அவருக்கு எழுதப்பட்ட கடிதங்கள் மூலம் தெரியவந்துள்ளது. எனினும் புரட்டாதி மாதம் மூன்ரும் திகதி அவர் நாடு திரும்பவென எடுத்த முடிவுக்கு பல காரணங்கள் இருந்தன:

1) மருத்துவபீட இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு நடாத்தப்பட வேண்டியிருந்த வாய்மொழி மூலமான பரீட்சை.

   பெண்கள் புனர்வாழ்வு இல்லமான "பூரணி. இல்லத்"தில் (இது ஆரம்பிப்பதற்கு ராஜினி உதவியிருந்தார்) தலைநீட்டிய பிரச்சனைகள்.

   அவர் பிரித்தானியாவிலிருந்து நாடு திரும்பியபின் உபவேந்தருக்கு எழுதிய கடிதத்தில் தனது ஆய்வுநெறியின் வெற்றி பற்றிக் குறிப்பிட்டபின், <u>"எனது மக்களைப் பிரிந்து எனக்கென்று ஒரு வாழ்வு இல்லை. அதனல் நான் மீண்டும் வந்துவிட்டேன்"</u> என்று எழுதியிருந்தார். இக்கடிதம் உபவேந்தரால் ராஜினியின் ஞாபகார்த்தக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

<u>மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்(யாழ்) (UTHR/J)</u>

ராஜினி முக்கிய அங்கத்தவராய் இருந்து இயங்கிய இச்சங்கம் கடந்த ஒரு வருட காலமாக, 'இயக்கங்கள் மனித விழுமியங்களை மதிப்பிறக்கம் செய்வது' தொடர்பான அறிக்கை வெளியிட்டிருந்தது. இச்சங்கம் இயக்கங்கள், IPKF, அரசாங்கம் ஆகிய எதன் பக்கமும் சாராமல் நடுநிலையாக இருந்தது.

"நாம் வெளியாரைப் போல் சமூகத்துக்கு வெளியே நின்றுகொண்டு அதைக் கண்டிக்க முடியாது; ஆனல் நாமும் பிரச்சனைகளின் ஒரு பகுதி என்பதையும், அத்துடன் எம் நடத்தையும் உளப்பாங்கும் கெட்டவையுருவாகக் காரணமாகின்றன என்பதையும்- நாம் ஆய்வுக்கு எடுக்க வேண்டும்" என்ற வெளிப்படை உண்மையை ராஜினி நன்கு அறிந்திருந்தார். இக் கெட்டவைகளின் உருவாக்கத்தில் சமுதாயத்தில் முதற் பலியாகிப் போவோர் ஆயுதம் தாங்கியோரே! அவரின் கோபத்தில் கருணை கலந்திருந்தது.

சீர்திருத்தத்துக்கான தேவையை அனைவரும் உணர்ந்திருந்தமையே UTHRஇல் சகல பல்கலைக்கழக ஊழியர்களையும் (விரிவுரையாளர் முதல் நிர்வாக அலுவலர்வரை) அங்கத்தவராகத் தூண்டியது. மேலும் மாணவர்களைக் கைது செய்தல் மற்றும் இன்னோரன்ன விடயங்களில் இயலுமான நடவடிக்கை எடுக்கவும் இத்தகைய பல்கலைக்கழக ஊழியர் அங்கத்துவம் பெற்ற சங்கம் கணிசமான பங்கு வகிக்க முடிந்தது.

<u>"The broken palmyrah (சிதைந்த பனைமரம்)"</u>

ராஜினியும் இன்னும் மூன்று கல்விமான்களும் சேர்ந்து எழுதிய இந்த நூல் (1988) தமிழரின் துரதிர்ஸ்ட நிலையை பக்கச் சார்பின்றிப் பரிசீலிக்க எத்தனிக்கின்றது. இது அரச படைகளதும் இயக்கங்களதும் கொள்கை விளக்கம்பற்றியும் வெளிப்படையாகவும் துணிவாகவும் பேசுகிறது.

எமது சமூகத்தினூடு பரிணமம் பெறும் பாசிசப் போக்குப் பற்றிய கலந்துரையாடல்கள் எம்மை சுய தூய்மைப்படுத்த உதவும் என்பது பற்றி ராஜினிக்கு நம்பிக்கையிருந்தது. யாழ்ப்பாணக் கல்விமான்கள் இதுபற்றிக் கலந்துரையாட அஞ்சும் நிலையை

---

தேவகி தவக்குமார்

---

இந்நூலில் அவர் கண்டித்திருந்தார். ஆரோக்கியமான சமூகப் பரிணம வளர்ச்சிக்கு இத்தகைய விமர்சனங்கள் அவசியமென அவர் எண்ணினர். கொலையாளர்களுக்கு அவரின் இத்தகைய போக்கு பிடித்திருக்கவில்லைப் போலும். அவர்கள் விரும்புவது ஒரு உயிர்ப்பற்ற, எதுபற்றியும் கவனம் செலுத்தாத, அயலானைக் கண்டு அஞ்சுகின்ற மனிதர்களைக் கொண்ட- குறிப்பாகக் கல்வி, கலாசார, புத்திஜீவிதமற்று பாலையாகிப் போன ஒரு சமூகத்தையே.

<u>பெண்களும் ராஜினியும்</u>

நாட்டுப் பிரச்சனைகளின் விளைவாக வாழும் வகையற்றுப்போன பெண்களுக்கு- குறிப்பாக பாலியற் பலாத்காரத்துக்கு உட்பட்ட அல்லது குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்க்கு- உதவுவதில் அவர் கூடிய கவனம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அவர் கூடிய அக்கறை காட்டினர்.

'சிதைந்த பனைமரத்'திலிருந்து பெண்கள் தொடர்பான சில பகுதிகள்:

* தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் பற்றிய நிலைப்பாடு, கொள்கை, நடைமுறை தொடர்பாக பெண்களை ஆயுதப் போராட்டத்தில் இணையுமாறு கோரும் இயக்கங்களின் ஆரம்ப கொள்கை விளக்கப் பிரசுரங்கள் தவிர வேறு எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலைப்பாடுபற்றி இயக்கங்களுக்கு உள்ளேயே மிகுந்த குழப்பமான கருத்துகள் காணப்பட்டதென்பதை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஆனாலும் தமது தலைவரின் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்கும் ஆற்றலின்மீது கொண்ட நம்பிக்கையையே தமது விவாதத்தின் இறுதி முடிவாக அவர்கள் வைத்தனர். இதைக் கேட்டு துக்கமடைநத ஒரு பெண் கூறினார், "ஒரு பெண்ணின் பங்கு வெறுமனே ஆயுதத்தைத் தாங்கும் இயந்திரத்தின் பங்கைவிட கூட என்பதை தயவு செய்து ஞாபகத்தில் கொள்"

* ஏன் போர்க் காலங்களிற்கூட எம் சமூகத்தில் பெண் மிகவும் துணிவாக இயங்கியுள்ளாள். இந்திய இராணுவத்தின் அநியாயங்களை எல்லாம் தனியாகவோ சிறு குழுக்களாயோ சேர்ந்து வெளிக்கொணர்ந்ததில் அவர்களின் பங்கு அளப்பரியது.

மறுதலையாக பெரும்பாலும் பெண்களே போர் நடுவில் தமது குடும்பங்களுக்காகவும் தேசத்துக்காகவும் தீவிரவாதிகளுடன் வாதிட்டும் மன்றாடியும் வந்தவர்கள். மட்டக்களப்பில் ஒரு பெண்ணே மற்றவர்களுக்காக உண்ணாவிரதம் இருந்தாள். இதனால் எமது அரசியல் வரலாறு பற்றிப் பேசும்போது பெண்களின் பங்களிப்பு வெற்றி பெறுகிறது. அங்கு அதிகாரமின்மை, ஏமாற்றம், எதிர்பார்ப்பு, பொய்த்தனம் போன்றன இருந்தாலும் நம்பிக்கையும் அங்கிருந்தது. நாங்களும் பங்களித்தோம்... ஒரு சிறிதளவு...

<u>மனித உரிமைகளின் தேவதை</u>

ஆண்களே வாய்திறந்து மனித உரிமை, பேச்சுச் சுதந்திரம் பற்றிப் பேச அஞ்சும் ஒரு தருணத்தில் ராஜினியின் துணிவு பெண்களுக்குப் பெருமை சேர்ப்பதும் முன்மாதிரியானதுமாகும். இரு சிறுமிகளைப் பெற்ற தாயாகவும், எண்ணற்ற மாணவர்களுக்கு அன்புத் தாயாயும் இருந்த அவர், தற்செயலாக கலவரத்தில் மக்களோடு மக்களாக இறக்கவில்லை. திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டார். பிரிட்டனிலிருந்து வந்து இரண்டாம் ஆண்டு மருத்துவபீட வாய்மொழிப் பரீட்சையை இறுதி மாணவருக்கு நடத்தும்வரை காத்திருந்து அது முடிந்து பிள்ளைகளைக்காண வீடு திரும்புகையில் சைக்கிளில் வந்து சுட்டு, அவர் விழுந்தபின் சைக்கிளை நிறுத்தி மேலும் சில ரவைகளைப் பாய்ச்சுமளவுக்கு கொலையாளியால் இது திட்டமிடப்பட்டுள்ளது. கொலையாளிகள் கொலையை உரிமை கோராததிலிருந்து அதன் நியாயமின்மை வெளிப்படுகிறது. ஆரம்பத்தில் பயந்துவெளிவராதிருந்த மக்கள் பின் ராஜினியின் அஞ்சலிக் கூட்டங்களுக்குப் பெருந்திரளாக வருகை தந்தமை மக்களுக்கு மனித உரிமைகளை ஒரேயடியாக மறுக்கமுடியாது என்பதையே காட்டுகின்றது.

## ஆயிரத்தில் ஒன்றாகி.....

அன்றென் மனதில் ஆழப் பதிந்தவை
ஆயிரம் நினைவுகள்..
உனதிளம் கன்னம்,
எழிலுறும் கண்கள்

இன்றென் கண்களில் பனித்திரையாக
நீர்த்திரை படர்வதேன்?
அன்று வேண்டாமென்றாயே...

மனது வலித்தது நினைவிருக்கிறதா?
அல்லது,
உடைந்து போய்விட்ட
ஆயிரங்களில்-
நானும் ஒன்று?

•

காயத்ரி,
கன்பரா,
அவுஸ்திரேலியா

## ராஜினிக்கு ஒரு மலர்க்கொத்து

மேனாட்டு வாழ்வின்
வளத்தை மறுத்தாய்

மரணத்தின் வெம்மூச்சினூடும்
உனது தலையை நிமிர்த்தி
இங்கு வாழவெனத்
தாய்நாடு மீண்டாய்.

உன்னை அவர்கள்
நாயைச் சுடுவது போல்
நடுவீதியில் சுட்டனர்.
ஆனாலும் உன் மரணம்
அவர்களின் சிறுமையாயும்
உனது பெருமையாயும்
நினைவு கூரப்படும்.

நான் உனக்கு
மலர்வளையம் கொண்டுவரவில்லை.
மாறாக,
மணப்பெண்ணென
மலர்க்கொத்துக் கொண்டுவந்தேன்.

## ராஜினி

முறம் வீசி பதர்நீக்த
முழுநிலவுக் கசிவொளியே!
இனியவன் கொடியவன்
எவனெனச் சொல்!

நெற்றியில் பூட்டிய
செந்நிறப் பொட்டுடன் வற்றிய கல்வியை
வளாகத்தில் தந்திட
வெற்றியும், நடையுமாய்
சுற்றிய சூரியன்
பற்றி எரிந்திட
பாடையில் இட்டவர் யாரவர்?

தன்னினம் வாழ
விண்ணுடன் போரென
கண்ணில் கனலுடன்
பண்ணில் முரசொலித்து
தன்னுடன் ஓர்படை
தனித்தே அமைத்திட

நுண்ணிய அறிவுடன்
துணிந்தே நின்ற
வெண்மணிச் சுடரே!
அம்மா ராஜினி.

பின்னிய கரமதாய்
மண்ணில் வீழ்ந்தபின்
பெண்ணுக்கு இரங்கிடும்
பேயிலுங் கொடியதோர்
கானக மானிடம்
காரிருள் நாயகர்
சக்கர வண்டியை
சரித்தே வீழ்த்தி
எஞ்சிய குண்டினை
நெஞ்சினில் பாய்ச்சிட்ட
வஞ்சக நெஞ்சகர்
வலம்வரும் தேசமே!

செடியும் கொடியும்
மடிந்தும் கொழுந்தாய்
இருளும் மருளும் இணைந்தேவீழ
புதுயுக மலர்களாய் பிரளயம் வெடிக்கும்.

- கார்த்தினி -

www.tamilarangam.net

# திருமதி ராஜினி திரணகமவின் நினைவுக்கட்டுரை

தமிழ் மக்களுக்காக போராடும் உரிமை எமது தேசத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.. பகிரங்கமாக உரிமை பாராட்டிக் கொள்ள முடியாத அநீதியான ஒரு செயல் 1989 செப்படம்பர் 21ம் திகதி மாலை ஆறு மணியளவில் தனியாக வீடுதிரும்பிக் கொண்டிருந்தாள் அந்தத் தாய். எதிரியை நோக்கி திரும்பவேண்டிய துப்பாக்கியால் அந்தத் தாய் தெருவில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டாள்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல்துறை தலைவி வைத்திய கலாநிதி ராஜினி திரணகம என்ற நீதிக்காகப் போராடியவரே இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது இலங்கை அரசினதும், இந்திய இராணுவம் கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகள், கொலைகள் பற்றிய உண்மைகளை சேகரித்து சர்வதேச மட்டத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றார். ராஜினி திரணகமாவின் மனிதாபிமானமுள்ள நடவடிக்கைகள் இந்திய கூலிப்படைக்கும், அதன் அடிவருடிக் கும்பல்களான(EPRLF,ENDLF, TELO வினர்க்கும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் முந்திக் கொண்டனர்.

ராஜினி திரணகம இலங்கை அரசின் ஆக்கிரமிப்பை மட்டுமின்றி, இந்திய மேலாதிக்கத்திற்கும் எதிராய் வெளிப்படையாகவே குரல் எழுப்பிவந்தார். தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் சரியான வழியில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டிருந்தார்.

ராஜினி திரணகம மட்டுமின்றி தமிழ் மக்களுக்காகப் போராடப்புறப்பட்டு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தவறான பாதைகளை இனங்கண்டு அவற்றை விமர்சித்த பலர் இவ்வாறு நமது விடுதலைக் குழுக்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி மடிந்து போய்விட்டனர்.

ஈழத்தின் பிரதான குழுக்கள் அனைத்துமே ஜனநாயகவிரோதத் தன்மை கொண்ட அமைப்புக்களாயே உள்ளன. தமது இயக்கத்தினுள் இருக்க வேண்டிய ஜனநாயகத்தை மட்டுமின்றி மக்களுக்கு வழங்க வேண்டிய ஜனநாயகத்தையும் இவர்கள் மறுக்கின்றனர்.

தமிழ் மக்களின் மீதான இலங்கை, இந்திய ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக போராட முனையும் ஏனைய சக்திகளையும் அங்கீகரிக்க இவர்கள் மறுக்கின்றனர். இவ்விதமான தமது ஜனநாயக விரோத போக்குகளை விமர்சிக்கின்ற மனிதர்களையும் கொல்வதற்கு இவர்கள் தயாராய் இருக்கின்றனர். இவர்களின் இந்த ஜனநாயக விரோத போக்குகளே இவ்விதமான கொலைகளுக்கான காரணமாகும்.

எமது தேசத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் தமிழ் மக்களுக்காக போராடுகின்ற உரிமை உண்டு. இதற்காக தான் விரும்பும் ஸ்தாபனத்தில் சேருவதற்கோ அல்லது தான் விரும்பியவாறு ஒரு ஸ்தாபனத்தை அமைக்கவோ, பூரண உரிமை உண்டு. தமிழ் மக்களின் போராட்டத்திற்கு துரோகம் இழைக்காதவரையில், எதிரிகளின் கைக் கூலிகளாய் செயற்படாதவரையில் இந்த உரிமை எமது தேசத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது. இந்த உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

ஆனால் விடுதலைப்போராட்டத்தின் தவறுகளை விமர்சித்தவர்கள், தமிழ்மக்களுக்காக தமது கருத்துக்களின் அடிப்படையில் போராடப்புறப்பட்ட பலர் அநியாயமாக கொல்லப்பட்டனர் என்பது எமக்குள்ள உரிமையை இந்த விடுதலைக் குழுக்கள் அங்கீகரிக்க மறுக்கின்றன என்பதையே வெளிப்படையாகக் காட்டுகின்றன.

ராஜினி தனது மருத்துவபீட தலைவருக்குரிய கடமைகளை மட்டும் பொறுப்பாக செயற்படுத்திக் கொண்டு பாசம் மிக்க தாயாகவும், ஒரு மனைவியாகவும் வாழ்ந்திருந்தால் அவர் இத்தகைய ஒரு மரணத்தை சந்தித்திருக்கமாட்டார். இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் அனைவருமே தமது சொந்த வாழ்கைக்காக மட்டும் வாழ்ந்திருந்தால் இந்த வகையிலான மரணங்களை தவிர்த்திருப்பார்கள்.

கொல்லப்பட்ட இந்த மனிதர்களெல்லாம் தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பாக தமக்குள் சில உறுதியான கருத்துக்களை கொண்டிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து பிரதான இயக்கங்களின் பாதை தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தராது என்று கருதினர். இது பற்றி விமர்சனங்களை முன்வைத்தனர். அத்தோடு தமிழ் மக்களின் விடுதலையை சரியான போராட்ட வழிமுறைகளின் ஊடாக வென்றே எடுக்க வேண்டும் என்றும் எப்போதும் உறுதியாக இருந்தனர். இவர்களின் இந்த கருத்துக்களை விடுதலைப்புலிகள் உட்பட பல குழுக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. தமது போராட்ட தவறுகள் சுட்டிக் காட்டப்படுவதை இவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தாம் விரும்பிய வழியில் தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்க ஸ்தாபனங்களில் சேருகின்ற, ஸ்தாபனங்களை அமைக்கின்ற உரிமைகளை இயக்கங்கள் மறுத்தன. இதனாலேயே இக்குழுக்களால் இந்த மனிதர்கள் கொல்லப்பட்டனர்.

இத்தகையவாறு தனி நபர்களை அழிப்பதனால் அவர்களது கருத்துக்களை அழிக்கவோ, அல்லது இந்த கொலைகளை செய்த குழுக்கள் தமது இலக்கை அடைந்துவிடவோ முடியாது. மாறாக இக் கொலைகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களை ஒடுக்கும் இலங்கை அரசுக்கும், பிராந்திய ஆதிக்கவாதிகளுக்கும், அவர்களின் அடிவருடிகளுக்குமே சேவகம் செய்கின்றன என்பதை கொலைகளுக்கு காரணமானவர்கள் உணர வேண்டும். தமிழ் மக்களின் போராட்டத்தினையே இவை பலவீனப்படுத்துகின்றன. இந்நிலையில் இவ்வகையிலான கொலைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமாயின் இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

(1) இலங்கை பாசிச அரசை தூக்கியெறிந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க அனைத்து தேசபக்த ஜனநாய சக்திகளும் ஒன்றுபடவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(2) ஏகாதிபத்திய, இந்திய பிராந்திய ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்பாக விழிப்பாக இருக்கவேண்டும்.
(3) போராட்டப் பாதையில் உள்ள ஜனநாயக விரோத பாசிச வழிமுறைகள் தவறானவை.
(4) இலங்கை அரசுக்கு எதிராயும், பிராந்திய ஆதிக்க சக்திகளுக்கு எதிராயும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க போராடும் அனைத்து தேசபக்த ஜனநாயக சக்திகளும் மக்கள் மத்தியில் செயற்படும் உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டும்.
(5) தமிழ்மக்களுக்கு அவர்களுக்காக போராடும் குழுக்களை விமர்சிக்கின்ற உரிமையும், ஜனநாயகமும் வழங்கப்பட வேண்டும்.

## உண்மை

ஒரு கவளம் அக்கினியாய்
நெஞ்சுக்குழியை
எரித்துக்கொண்டிருக்கும்.

பொய்க்காற்றுக்கு அல்லப்போதில்
சாட்டைநாக்கு வெளிவந்து.
தீக்கங்குகள் சுவறியெறிந்து
அற்பதிருப்திகளில் அடங்கிப்போய்
மீண்டும் சுருண்டு
ஒருகவளம் அக்கினியாய்
கனன்றுகொண்டிருக்கும்.

பியர்நுரையில் குளிர்ந்துபோய்
விடுவதாய் ஒருமாயை.
அதுவே அதிகமாக
நுரைகக்க வெளியேற்றி
மீண்டும்............
ஒருகவளம் அக்கினியாய்

ஏதோ ஒரு நாளில்
கடுங்கோடை வெப்பத்தில்
வாந்தியெடுப்பேன்
அதன்பின்
இந்த அவஸ்த்தைகளெல்லாம்
அஸ்தமித்துவிடும்.

-ஆனந்தப் பிரசாத்-

நன்றி : தேடல்
கனடா

## எலும்புக்கூடுகளின் ஊர்வலம்

### ராஜினி

இன்னும் கொஞ்ச நேரத்தில்
சூரியன் மறைந்து விடுவான்.

இருள் கவிந்து விடும்

இனி வரப் போகிற இருள்
முன்பு போல அல்ல;
பிசாசு

நிலாவைக் கொலை செய்து
வெள்ளிகளைப் போட்டெரித்த
சாம்பல் பூசிய இரவு
இந்த இரவுக்கு முன்
ஒரு சிறு கை விளக்கை
அல்லது ஒரு மெழுகு திரியை
ஏற்றி விடவேண்டும் என்று
விரைந்தாய்

அம்மா,
வேகம் அவர்க் கதிகம் இன்று
தென் திசை நின்று வந்தனர்.
யமனின் தூதர்கள்;
கைத்துப்பாக்கி;
ஐந்து குண்டுகள்

நீ விழுந்த போது
சூரியனின் கடைசிக் கிரணங்கள்
சுவரில் விழுத்திய
உன் நிழல்
கைகளை வீசி மேலே ஓங்கிற்று.

முடிவிலி வரை.

•

## சேரன் கவிதைகள்

தேடல் பதிப்பகம்
566, பாராளுமன்ற வீதி
ரொரன்டோ
கனடா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## Rajani Thiranagama - A Revolutionary Activist



On Thursday 21st September, Rajani Thiranagama was shot dead while on her way home from the University of Jaffna. Her murder sent a deep shock of sorrow and anger through a city where killings and disappearances are every day occurances. People knew that she had been killed for what she stood for and for the work she had been doing in the last few years.
Rajani was a socialist with a rare commitment to the people. She wanted their voices and opinions to be heard, their lives and their struggles and their often brutal deaths not to be forgotten, buried in the debris of a ravaged society. Since October 1987 she had been exposing and systematically documenting the atrocities committed by the IPKF (Indian Peace Keeping Force); by the Tamil paramilitary groups which the Indian army armed, infiltrated and now controls, and by the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

In the confusion of Northern Sri Lanka its atmosphere of lies and terror, of infiltration and hired assasins one cannot blame her murder on any one agency. It is possible however that her killer was acting under instructions from the IPKF or RAW (India's Intelligence Agency) or on behalf of the LTTE who since the recent truce with the IPKF are trying to eliminate all those who have dared to criticise them.

Rajani was 35 and had two young daughters. In the last few months her home had been raided by armed men.Her written manuscripts had been taken away and she had received a series of threats. In her letters she described harrassment from the IPKF:"the local army officer in charge is trying to trap me" and in a last letter which arrived in London after her death she had written "One day some gun will silence me. And it will not be held by an outsider, but by a son -born in the womb of this very society- from a woman with whom my history is shared".

Rajani was driven by a revolutionary's burning honesty so at a time in Sri Lanka when most "revolutionary" affiliations are based on fear or else in hope of personal gain, she remained independent. But she was not an aloof outside observer, she was an activist in the heart of a tortured community, close to ordinary people and so deeply loved that 2000 people defied intimidation by the IPKF and militant groups to commemorate her and protest at her murder.

As a student and later as a doctor in Jaffna ,she had lived through the Sri Lankan government's campaign of terror and repression against the Tamil community. But later, particularly in the wake of the 1983 holocaust against Tamils (when India stepped in to arm and infiltrate Tamil militant groups), she had witnessed and spoken out against the degeneration of the LTTE into a purely militaristic organisation with a callous disregard for the people. In interviews and discussions with South Asia Solidarity Group in June 1987 she had described the nature of the the LTTE and the relationship between them and the population as a whole: the fact that the LTTE had infact the same petit- bourgeois base as the parliamentary TULF (Tamil United Liberation Front); and how although it was the only liberation movement which offered a plan of military action and put it into practice, this alone is not enough to liberate a country. "There were no mass organisations which could effectively mobilise the people or voice their needs and opinions...there were all the externals of change: murals, Tiger courts, ribbon cutting by the Tigers! But the people had no role. They were spectators, bystanders.. unable to determine the course of their struggle."

Rajani was in Jaffna in July 1987 when the Indian Armed Forces were welcomed in as "peacemakers", and during the October War a few months later when she lived through the onslaught by the same peacemakers on civilian targets including Jaffna Hospital, refugee camps and villages. In a letter which was also a poem she wrote:

*"You want events, numbers, case histories?*
*Not now please, because my mind is strangled.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*I know its strange, but that is what I feel*
*That is what we live.*
*Pain agony and fear always fear.*
*I ask you, could you write straight when people die in lots?*
*When you find them dead like flies..."*

But it was in these days of anguish that she started analysing and documenting this chapter of Sri Lankan history calmly aware both of the need and the possible consequences of such a step. Because , although "To be objective or analytical seems to be a major effort like trying to do something physical in the midst of a debilitating illness..it is important for us to arrive at a synthesis in analysis, seek for an understanding, find space to organise, revitalise a community sinking into a state of resignation. Objectivity was not solely an academic exercise for us. Objectivity, the pursuit of truth and ..of critical and honest positions was crucial to the community but it was a view which could cost many of us our lives".

For Rajani the issue of revitalising the community was a central and essential condition for progress or change and she poured her remarkable energies into this particular struggle , because peoples' structures had to be organised or revived in order to voice peoples needs and real opinions. And it was in this context that she dealt with the role of Sri Lankan intellectuals What she wrote applies equally to their counterparts in India "Our intellectuals should have been the catalysts to energise the benumbed community but are unable to do so. In many instances they have side stepped confrontational issues with the IPKF (as they have done with the militant groups) and have resigned themselves to passivity...their unprincipled conduct reflecting merely a desire to create niches forthemselves in which they can survive with the trappings of respectability and nominal power". At Jaffna University where many of the lecturers have long since fled, Rajani almost single handedly ran the Anatomy Department.She taught a collosal 48 hours a week.But she still found time to set up the University Teachers for Human Rights Group and in the last few months she also produced and acted in a play about rape and violence against women in the context of war.

Her committment to fighting women's oppression was central to all her political activities.Among her reports and analysis is one powerful section which specifically documents the atrocities and physical and psychological damage suffered by Tamil women. Rajani had titled it "I have no more tears sister".

For Rajani politics was not something separate from the rest of her life, she was involved and active where ever she happened to. When she was in Britain for three years writing her Ph D thesis, she identified with the struggles of other black women and was involved in fighting racism at many different levels.She visited the North of Ireland as part of a Black Delegation. And in London she set up the Tamil Refugee Action Group and was one of the founders of South Asia Solidarity Group.

The reality of death is perhaps always hard to accept but more so in the case of this vibrant courageous woman with her laughter and optimism and her hope for the future.Rajani will be remembered as a doctor, a researcher into biology, as a writer and a political analyst but more than anything as a revolutionary activist who gave her life for the struggle in this bleak phase of Sri Lanka's history.

*South Asia Solidarity Group*

## Dr Rajani Thiranagama: Her contribution to the University Teachers for Human Rights (UTHR)

*-Extracts from a talk delivered by Rajan Hoole on behalf of UTHR, on 2nd October, 1989*

### The degeneration of Politics and implications for Human Rights work

Upto the early 80's, there was amongst a sizeable section of Tamil youth, a healthy interest in political issues accompanied by idealism. The issues were often of social injustice, their national and international dimensions and quite surprisingly there was a remarkable absence of the communalism which was poisoning the air in the country. But the 1983 riots and the involvement of foreign resources in the militarisation of our youth ensured that the tendency which gained ground was that of extreme nationalism which worshipped military success and by its nature became intolerant. Every other political tendency felt impelled to imitate this, even at the cost of coming out second or third best. Politics died as homicidal divisions increased. We know our recent history which led to a remarkable indifference to any kind of social or political effort on part of today's university students. Guns seemed to determine everything.

In this atmosphere of disillusionment, militant groups were finding themselves obliged to strengthen themselves against each other by taking in very young persons through a variety of questionable methods. The role of the Indian and Sri Lankan states in this episode is a shameful one.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## The Sri Lankan Tragedy

*Abdul Rahman Mohamed Babu, a well-known African Marxist political commentator and a leader of the 1964 Zanzibar revolution participated in the memorial meeting for Rajani Thiranagama held in Jaffna on the 21st of November. Here he recounts the experience and its lessons.*

My visit to Sri Lanka at the invitation of the Jaffna University Teachers for Human Rights was an eye-opener. I and a number of international human rights campaigners (including Martin Ennals Secretary of International Alert and Liz Philipson from the British Labour Party) had been invited to take part in the memorial meeting for a comrade campaigner - Dr Rajani Thiranagama who was brutally murdered in the streets of Jaffna on 21st September last year by hitherto unknown assasins. Rajani was one of the thousands of Tamils, fallen at the hands of fellow Tamils, whose deaths have weakened rather than strengthened the objectives of the Tamil struggle.

Africa's involvement with modern Asian revolutionary struggles has a long history. Throughout the 1950s and the early 1960s many African revolutionary fighters drew most of their inspiration from liberation struggles in Asia. They studied the strategies and tactics of the struggles in China, Korea, Vietnam, Burma, Malaysia, Indonesia, the Naxalite struggle in India and so on. All these struggles, some successful, some not yet, had one thing in common which made them worth studying, namely, the movements which led them enjoyed warm spontaneous support from the people. The people loved and admired their fighters.

During our visit to Sri Lanka we could not help noticing that this rapport between the people and the fighters was missing. On the contrary, we saw with grief that the people actually feared the fighters; they were terrified by them. It seemed to us that they were all conscious of the fact that any one of them could be a victim of indiscriminate killing tomorrow, like many of their fallen friends and relatives. The only one thing that outsiders can learn from this situation, unlike in previous Asian experiences, is by its demonstration as a negative example: that is, the danger of a liberation movement when it loses a sense of direction. It develops negative tendencies and, as it loses the respect of the people, it often resorts to anti-people activities. It is a general rule in all revolutionary struggles that once the movement loses direction, its first act is to victimise its most able, most devoted cadres. It "devours its own children", as the saying goes. The movement then falls rapidly into the hands of opportunists and adventurists; it leads to splits among the ranks, even to acts of terrorism. This is because a misguided movement is baffled when it is confronted with contradictions of any kind; it regards any contradiction as a threat to its survival whose physical manifeatations must be physically liquidated.

This inability to identify the different kinds of contradictions and utilise them to positive effect, is tragically noticeable in the main Sri Lankan movements. It is obvious, for instance, that their inability to distinguish between "antagonistic contradiction" and "contradiction among the people", is probably the key factor which has turned Sri Lanka into killing fields. Potential friends or allies of the movement are mistaken for enemies to be eliminated, and enemies mistaken for friends to be embraced. Experience has shown that this confusion is always fatal to any movement, and very damaging to the people it claims to represent or for whose welfare it is fighting. And Sri Lanka's tragic experience confirms it.

There was universal condemnation among the people for the assasins of Rajani. As we marched through the streets of Jaffna on the Peace March organised by the University and attended by thousands of people from the North as well as the South of Sri Lanka, Rajani's popularity was obvious. All streets were covered with posters proclaiming her a martyr, her portraits dominated the entire town. Many pedestrians would rush to the organisers of the march requesting her poster to take home with them. The city was in obvious mourning and although there were armed Indian soldiers and other armed groups around, ostensibly to protect the march but actually to terrorise the people, the town dwellers could not be intimidated on this occasion. They showed where their sympathies were. Rajani was the heroine of Jaffna.

Rajani, like many others, may have been the victim of a movement which has lost its sense of direction. Experience elsewhere has shown that when such movements eventually come to power, as was the case with the Pol Pot regime in Cambodia, the consequences are often disastrous. Leaders would often be driven to commit the worst crimes against the people in the name of the people, and they would do this in all sincerity. Sri Lanka, North and South appears to be at this stage - on the slippery slope to this abyss. If no more Rajanis appear on the scene to proclaim in one organised voice, **"No more killings - enough is enough !"** then these misguided policies will turn to national tragedy.

*Inqilab*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Rajani was very concerned about the fate of these young men. She had a deep compassion for these young men who could not understand their actions, viewed death as a welcome certainty, and hated the community which had done nothing while they were consigned to this degrading form of slavery.

Rajani and the reopening of the University following October 1987

The crisis facing the community following the Indian offensive of October 1987 was one which brought out her energy and strength of character. She was so appalled after seeing the conditions of refugees in Nallur Kandasamy Kovil, that she sat down to write a leaflet. She felt that the reopening of the University was the best chance of having some means of defence for the community. She said that we cannot sit around waiting for the Indians to ask us to come in and conduct lectures.....The Indian army was in control of the premises at that time. A section of the staff felt so numbed by the damage that they advocated not doing anything until outsiders came and the damage was publicised. Rajani held that we had existed long enough as a community displaying our sores and eliciting pity. She felt that to prevent the recurrence of such a catastrophe, we must show a will of our own to make our own future. Thereafter work commenced on securing what had survived the war damage........

It was common for Indian officers to attack the militants and blame them for everything. Others responded by saying that they didnot know the militants and were innocents. But Rajani took them head on and would say forthrightly, "We as a community must take responsibility for our catastrophe. The militants are a part of our history, a part of our community. I cannot artificially distance myself from the militants and condemn them". She felt that all the risks that she took at that time had to be taken, because the young men who took many risks and had brought the community to this state were likely to respect only those who themselves took risks.

### Jaffna Hospital

One incident which concerned her greatly was the massacre at Jaffna Hospital on 21st October 1987, during the Indian assault leaving about 70 dead. Rajani felt that the callousness of the Indian entry was inexcusable. Many of the doctors thought that it was too dangerous to bring out the truth. Some felt that they should wait for an appropriate time. There was even a fear of issuing public appreciations of the medical staff killed. Rajani felt that the truth should be brought out at the earliest and set about interviewing staff at the hospital where she had once worked.

### Challenge to the University

What Rajani believed in was not an abstract philosophy, but was one which evolved to the demands of a social conscience which insisted on both compassion and consistency. Her courage was tied to a sense of responsibility. There is no doubt that she was practically effective. She died because the rest of the community valued her services but was too cowardly and cautious to emulate her sense of responsibility. For many, the accepted wisdom is not to take any risks, but to rely on the risks of the others. If we have for the present, the uncertain present the option of clinging to positions while shirking moral responsibility or of slinking away with degrees without caring to secure the future well being of the student community, it is because there were fools like Rajani.



*Peace March in Jaffna*

naqilah

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்